Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 222 | உள்ளூர் - 10.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 222 | வெளியூர் - 11.08.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**பணம் சேர? இந்த பரிகாரங்களை செய்யுங்கள்!**

**சென்னை ICF-ல் 1,010 பணியிடங்கள்!**

**தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம்!**

**தமிழக பஸ்கள் கர்நாடகத்துக்கு செல்லுமா?**

## தவெக அரசின் 100 நாள் சாதனை!



சென்னை, ஆக. 10–

தமிழகத்தில் தவெக அரசு அமைந்து 100 நாட்கள் நிறைவடைய உள்ள நிலையில், இதுவரை செயல்படுத்தப்பட்ட முக்கியச் சாதனைகள் மற்றும் முன்னோடித் திட்டங்களை துறைவாரியாக தொகுத்து அறிக்கை தயாரிக்க அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. அரசின் 100 நாள் நடவடிக்கைகளில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள், மக்கள் நலத் திட்டங்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன.

லஞ்சம், ஊழல் புகார்களை உடனடியாக பதிவு செய்ய பிரத்யேக வாட்ஸ்அப் எண் அறிமுகம்; அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனைகள் தீவிரம்.

பெண்களின் பாதுகாப்புக்காக 'சிங்கப்பெண் அதிரடிப்படை' உருவாக்கம்.

கூட்டுறவு வங்கிகளின் ரூ.75,000 வரையிலான பயிர்க்கடன்கள் தள்ளுபடி; குறுவை நெல் சாகுபடிக்கு ரூ.134 கோடி சிறப்பு தொகுப்பு.

குடும்பங்களின் மின்சாரச் சுமையை குறைக்க 200 யூனிட் இலவச மின்சாரம் நடைமுறை.

முதற்கட்டமாக 717 டாஸ்மாக் கடைகள் மூடல்; போதைப்பொருள் தடுப்புக்கு தனிப்படை அமைப்பு.

ஏழை மக்களின் பசியை போக்க அம்மா உணவகங்கள் மேம்பாடு மற்றும் சீரமைப்பு.

சட்டவிரோத குவாரிகளுக்கு கடும் நடவடிக்கை; வெளிமாநிலங்களுக்கு கனிம வளங்கள் ஏற்றுமதிக்கு முழுத் தடை.

பத்திரப்பதிவுத் துறை முறைகேடுகளைத் தடுக்க புதிய கட்டுப்பாடுகள் அமல்.

குடிநீர் கட்டமைப்பை வலுப்படுத்த மத்திய அரசுடன் ஆலோசித்து 'ஜல் ஜீவன் 2.0' திட்டம் தொடக்கம்.

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கம் வழங்கும் 'தாய்மாமன் தங்க மோதிரம்' உள்ளிட்ட புதிய திட்டங்கள் அமல்.

வரும் ஆகஸ்ட் 17–ம் தேதி 100 நாட்கள் நிறைவு பெறுவதையொட்டி, அனைத்து துறைகளின் சாதனைகளையும் ஒருங்கிணைத்து முழுமையான அறிக்கை தயாரிக்கும் பணியில் உயர் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

## கிருஷ்ண ஜென்ம பூமி விவகாரம்: மதுராவில் போலீஸ் குவிப்பு!




மதுரா, ஆக. 10–

கிருஷ்ண ஜென்ம பூமியை மீட்க ஆகஸ்ட் 9–ல் கர சேவைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதால் மதுராவில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. ஏராளமானோர் மதுரா வந்த நிலையில், நான்கு முக்கிய இந்து மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஷாயி ஈத்கா மசூதி உள்ளிட்ட முக்கிய இடங்களில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. மதுரா எல்லைகளில் தடுப்புகள் அமைத்து வாகனங்கள் சோதனை செய்யப்பட்டதுடன், வெளியூர்களில் இருந்து வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதனிடையே, டிசம்பர் 6–ல் மீண்டும் கர சேவை நடத்தப்படும் என மதத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். அயோத்தியைப் போல மதுராவிலும் பிரம்மாண்ட கிருஷ்ணர் கோயில் கட்டும் திட்டம் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜார்க்கண்ட் மாணவர் போராட்டம் தீவிரம்!





ஜார்க்கண்ட், ஆக. 10–

ஜார்க்கண்ட்டில் புதிய வேலைவாய்ப்பு மற்றும் தேர்வு விதிமுறைகளுக்கு எதிராக மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. அரசுக்கும் மாணவர் பிரதிநிதிகளுக்கும் இடையே நடந்த 6–வது சுற்று பேச்சுவார்த்தையும் தீர்வு இன்றி முடிந்தது.

தேர்வுகளில் வெளிப்படைத்தன்மை, முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை, வினாத்தாள் கசிவு குறித்து சிபிஐ விசாரணை உள்ளிட்ட கோரிக்கைகளை மாணவர்கள் வலியுறுத்துகின்றனர்.

மாணவர் போராட்டத்துக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆதரவு தெரிவித்துள்ளார். இதனிடையே, தேர்வு முறைகேடுகளை விசாரிக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. JPSC உறுப்பினர்கள் 3 பேருக்கு சிஐடி சம்மன் அனுப்பிய நிலையில், அவர்களின் ராஜினாமாவையும் ஆளுநர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

## உச்சக்கட்ட பாதுகாப்பில் சுதந்திர தினம்!




புதுடெல்லி, ஆக. 10–

ஆகஸ்ட் 15–ம் தேதி நாட்டின் 80–வது சுதந்திர தின விழா டெல்லி செங்கோட்டையில் நடைபெறுகிறது. பிரதமர் மோடி தேசியக் கொடியேற்றி உரையாற்றுகிறார். விழாவையொட்டி செங்கோட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளில் 20,000–க்கும் மேற்பட்ட போலீஸ், துணை ராணுவப் படையினர், கமாண்டோக்கள் மற்றும் NSG வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1,000–க்கும் மேற்பட்ட CCTV கேமராக்கள், முகஅடையாள தொழில்நுட்பம், வாகன எண் கண்காணிப்பு, ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் சமூக வலைதள கண்காணிப்பு என பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தீவிரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்ள 'சுதர்ஷன் சக்தி–5' என்ற கூட்டு தடுப்பு பயிற்சியும் டெல்லியின் முக்கிய இடங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

## FMCG பொருட்கள் விலை மீண்டும் உயர்வு?



சென்னை, ஆக. 10–

செப்டம்பர் காலாண்டில் முன்னணி FMCG நிறுவனங்கள் பிஸ்கட், சோப்பு, உணவுப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் விலையை உயர்த்தத் திட்டமிட்டுள்ளன.

சில நிறுவனங்கள் ஏற்கனவே 25% விலை உயர்த்தியுள்ள நிலையில், அடுத்த கட்டத்திலும் விலையேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், Shrinkflation முறையில் விலையை மாற்றாமல் பாக்கெட்டின் எடையை குறைக்கவும் நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. குறிப்பாக ரூ.5, ரூ.10 பிஸ்கட் பாக்கெட்டுகளின் எடை குறையலாம்.

மூலப்பொருட்களின் விலை உயர்வால் நடுத்தரக் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களின் செலவு மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## இந்திய டெக்கிகளுக்கு மீண்டும் பேரதிர்ச்சி!

# H-1B விசாவில் 60 நாள் 'கெடு' ரத்து? வேலை பறிபோனால் வெளியேற வேண்டுமா?

## டிரம்ப் –ன் புதிய கட்டுப்பாட்டால் கலக்கம்!!




வாஷிங்டன், ஆக. 10–

அமெரிக்காவில் டிரம்ப் தலைமையிலான அரசு ஹெச்1பி விசாவில் அடுத்தடுத்த கட்டுப்பாடுகளை கொண்டு வந்து இந்திய ஐடி ஊழியர்களை கலங்கடித்து வருகிறது. தற்போது அமெரிக்கா செல்ல ஹெச்1பி விசா கிடைப்பதே குதிரை கொம்பாகி போன நிலையில் ஏற்கனவே இந்த விசாவில் அமெரிக்காவில் தங்கி இருக்கும் டெக்கிகளுக்கு சிக்கலை ஏற்படுத்த டிரம்ப் நிர்வாகம் தயாராகி வருகிறது.

அமெரிக்க டெக் நிறுவனங்கள் திறன் மிகு வெளிநாட்டு ஊழியர்களை பணியில் அமர்த்த ஹெச்1பி விசாவை தான் பயன்படுத்துகின்றன. அந்த வகையில் இந்த விசாவை 70% பயன்படுத்துவது இந்திய ஐடி ஊழியர்கள் தான். இதனால் ஹெச்1பி விசாவில் கொண்டு வரப்படும் எந்த ஒரு மாற்றமும் இந்திய டெக்கிகளை பாதிக்கிறது. தற்போது ஹெச்1பி விசாவில் அமெரிக்காவில் பணிபுரியும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு, குறிப்பாக இந்தியர்களுக்கு, ஒரு முக்கிய பாதுகாப்பு வளையமாக இருந்த 60 நாள் வேலை தேடும் அவகாசம் ரத்து செய்யப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்க உள்துறை பாதுகாப்பு அமைச்சகம் தற்போதைய விசா விதிமுறைகளில் ஒரு புதிய மாற்றத்தை கொண்டுவருவது குறித்து ஆலோசித்து வருகிறது. இதன்படி, பணி நீக்கம் செய்யப்படும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு வழங்கப்படும் 60 நாள் அவகாசத்தை முற்றிலும் ரத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவு தற்போது நிர்வாகம் மற்றும் பட்ஜெட் அலுவலகத்தின் பரிசீலனையில் உள்ளது. இது இன்னும் சட்டமாக மாறவில்லை. தற்போதுள்ள விதிகளின்படி, ஹெச்1பி விசா வைத்திருப்பவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டால், அவர்கள் அமெரிக்காவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டியதில்லை. அவர்களுக்கு 60 நாட்கள் அவகாசம் வழங்கப்படுகிறது. இந்த காலக்கட்டத்தில் அவர்கள், புதிய வேலை தேடலாம், வேலை மாறியதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கலாம் அல்லது சட்டப்பூர்வமாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான ஏற்பாடுகளை செய்துகொள்ளலாம். ஒருவேளை இந்த புதிய மாற்றம் வந்துவிட்டால் ஹெச்1பி விசா வைத்திருப்பவருக்கு வேலை பறிபோனாலே உடனே நாட்டை விட்டு வெளியேற வேண்டி இருக்கும். இந்த மாற்றம் ஹெச்1பி விசா வைத்திருப்பவர்களுக்கு மட்டும் சிக்கலை ஏற்படுத்தாது. E–1, E–2, E–3, H–1B1, L–1, O–1 விசா வைத்திருப்பவர்கள் மற்றும் அவர்களை சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.

அமெரிக்க தொழில்நுட்ப துறையில் திடீர் ஆட்குறைப்பு ஏற்படும் போது, புதிய வேலை தேடுவதற்கு தேவையான கால அவகாசத்தை இந்த 60 நாட்கள் வழங்குகின்றன. இந்த அவகாசம் இல்லையென்றால், வேலை இழந்த அடுத்த நொடியே அமெரிக்க கனவு சிதைந்து விடும் அபாயம் ஏற்படும். அமெரிக்காவில் நீண்ட காலமாக பணிபுரிந்து, அங்கு வீடு, குழந்தைகளின் கல்வி மற்றும் இதர நிதி சுமைகளைக் கொண்ட இந்தியர்களுக்கு, உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற நெருக்கடி மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இந்த 60 நாட்கள் அவகாசம் இல்லையென்றால், சட்டப்பூர்வமாக அமெரிக்காவிற்குள் வேலை தேடுவதோ அல்லது விசா நிலையை மாற்றுவதோ மிகவும் கடினமாகிவிடும். இந்த மாற்றம் குறித்த தொடக்க நிலை ஆலோசனை தான் நடந்து வருகிறது. விரைவில் இதன் மீது பொதுமக்களின் கருத்துகள் கேட்கப்படும். மக்களின் கருத்துகளை ஆய்வு செய்த பின்னரே இறுதி விதிமுறை அமல்படுத்தப்படும்.

## நெல், கரும்பு ஊக்கத்தொகை உயர்வு: முதல்வர் விஜய் அறிவிப்பு!



சென்னை, ஆக. 10–

தமிழ்த்தாய் வாழ்த்து தொடர்பான தனித்தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேறியது. நெல், கரும்பு ஊக்கத்தொகை உயர்வு குறித்து, தமிழ்நாடு சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார். சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 789 ஊக்கத் தொகை என்றும் நெல் கொள்முதல் பருவம் செப்டம்பர் 1 முதல் தொடங்க உள்ளது. கரும்புக்கான ஊக்கத்தொகை டன் ஒன்றுக்கு ரூ.709.50 வழங்கப்படும்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், "தமிழ்த்தாய் வாழ்த்து" பாடலை தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் நிகழ்வு தொடங்குவதற்குமுன் கட்டாயம் முதலில் பாடப்பட வேண்டும் என்ற அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 10.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 25-ம் தேதி

## இந்தியாவுக்கு டிரம்ப் புதிய 'செக்'!




ரஷ்யாவிடம் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது 100 சதவீதம் வரை வரி விதிக்க அமெரிக்க அதிபர் டிரம்புக்கு அதிகாரம் அளிக்கும் மசோதா, அமெரிக்க செனட்டில் 8611 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால் ரஷ்யாவிடம் அதிக அளவில் எண்ணெய் வாங்கும் இந்தியா மற்றும் சீனாவுக்கு புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டு சட்டமானால், இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்காவில் 100 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் இந்தியாவின் அமெரிக்க ஏற்றுமதி வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்படலாம்.

எனினும், உடனடியாக 100 சதவீத வரி அமலுக்கு வராது. மசோதா அடுத்த கட்டமாக ஆகஸ்ட் 31–ம் தேதி அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஆய்வுக்கு வருகிறது.

இதற்கிடையே, அமெரிக்காவின் மிரட்டலுக்காக ரஷ்யாவிடமிருந்து மலிவான கச்சா எண்ணெய் வாங்கும் திட்டத்தை இந்தியா மாற்றக்கூடாது என பொருளாதார ஆய்வு அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இந்தியாவின் எரிபொருள் தேவையையும் பொருளாதார நலனையும் கருத்தில் கொண்டு, குறைந்த விலையில் கிடைக்கும் ரஷ்ய எண்ணெய் கொள்முதலைத் தொடர்வதே சரியான முடிவு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லட்சிய ஜனநாயக கட்சி ஆலோசனை கூட்டம்!



ஈரோடு, ஆக. 10–

ஈரோடு கிழக்கு மாவட்ட லட்சிய ஜனநாயக கட்சி சார்பில், ஈரோடு கிழக்கு மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய மாவட்ட வளர்ச்சி மற்றும் ஆலோசனைக் கூட்டம்நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஈரோடு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.அருள்குமார் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் லட்சிய ஜனநாயக கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் லிங்கராஜ், மாநில முதன்மை அமைப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் ஈரோடு மேற்கு மற்றும் பவானி மாவட்டச் செயலாளர் வெற்றிநிதி சின்னையன், துணைச் செயலாளர் பிரகாஷ், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி நிர்வாகி செல்வராக உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் பகுதி நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


# நெருப்பெரிச்சல் மண்டல் சார்பில் தேசியக்கொடி ஊர்வலம்!



திருப்பூர், ஆக. 10–

பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டத் தலைவர் சீனிவாசன் ஆலோசனைப்படி 80 வது ஆண்டு சுதந்திர தின விழாவினை முன்னிட்டு நெருப்பெரிச்சல் மண்டல் சார்பாக தேசியக்கொடி ஏந்தி சுதந்திரத்திற்காக உயிர் நீத்த தியாகிகளை போற்றும் விதமாக ஊர்வலம் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு நெருப்பெரிச்சல் மண்டல் தலைவர் உதயகுமார் தலைமை தாங்கினார் ஊர்வலத்தினை கோவை பெருங்கோட்ட அமைப்பு செயலாளர் எஸ் பாலகுமார் துவக்கி வைத்தார் இதில் மண்டல் பொதுச்செயலாளர் கார்த்திகேயன்,மாவட்ட சிறுபான்மை அணி தலைவர் ராபர்ட்,மாவட்ட கலை மற்றும் கலாச்சார பிரிவு தலைவர் கதிர்வேல்,மண்டல் துணைத்தலைவர் சரத் பிரகாஷ் மாவட்ட பொறுப்பாளர்கள் கோபிநாத், லிங்கேஸ்வரன்,பாலாஜி ரத்தினசாமி,பாண்டியன், மண்டல் நிர்வாகிகள் சிவா,வடிவேல்,காமாட்சி, சுந்தரம்,மோகன்,தங்கம், சுரேஷ், குணசேகர், ராமகிருஷ்ணன், சரவணன்,முத்து,ஜீவன்பால்,பொன்னுச்சாமி, தனசேகர்,பிரகாஷ், முருகன்சர்வீஸ் சென்டர் பொன்னையன், கவி அமுதன் உள்ளிட்ட நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்....

# திருப்பத்தூர் தெற்கு மாவட்டச் செயலாளராக சட்டமன்ற எம்எல்ஏ டாக்டர் திருப்பதி



திருப்பத்தூர், ஆக. 10–

தமிழக வெற்றிக் கழகத்தின் திருப்பத்தூர் தெற்கு மாவட்டச் செயலாளராக திருப்பத்தூர் சட்டமன்ற எம்.எல்.ஏ. டாக்டர் என். திருப்பதி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை கட்சித் தலைவர் விஜய் வெளியிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் தெற்கு மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மாவட்டக் கழக நிர்வாகிகள்:

மாவட்டக் கழகச் செயலாளர்: டாக்டர் என். திருப்பதி, எம்.எல்.ஏ.

இணைச் செயலாளர்: டி. சரஸ்வதி

பொருளாளர்: வி. அருணன்


துணைச் செயலாளர்: ஏ. சாமி

துணைச் செயலாளர்: வி. செல்வராஜ்

செயற்குழு உறுப்பினர்கள்:

ஏ. பாஸ்கர், கே. ராஜேஷ் குமார், கே. சரவணன், ஆர். தியாகராஜன், டி. சக்திவேல், டி. ஸ்ரீதரன், பி. உதயகுமார், எம். வினோத்குமார், ஆர். இம்ரான் கான், டி. சுதர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து 09.08.2026 புதிதாக பொறுப்பேற்றுள்ள திருப்பத்தூர் சட்டமன்ற எம் எல் ஏ டாக்டர் திருப்பதியை கட்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்து, மாலை அணிவித்து பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



# பணம் சேர? இந்த பரிகாரங்களை செய்யுங்கள்!




பணம் சம்பாதித்தாலும் கையில் தங்காமல் செலவாகிறதா? சேமிப்பு அதிகரிக்காமல் நிதி நெருக்கடி தொடர்கிறதா? ஜோதிட நம்பிக்கைகளின்படி, செல்வ வளத்தைப் பெருக்க சில எளிய பரிகாரங்களை தொடர்ந்து செய்து வரலாம்.

**மகாலட்சுமி வழிபாடு:**

தினமும் காலையில் மகாலட்சுமியை வழிபட்டு, சிவப்பு நிறப் பூக்கள், குறிப்பாக செம்பருத்தி மலர்களால் அர்ச்சனை செய்யலாம். பூஜையின்போது பாலில் வெல்லம் கலந்து நிவேதனம் செய்வது நிதி நெருக்கடி நீங்க உதவும் என்பது நம்பிக்கை.

**அனுமன் வழிபாடு:**

வீட்டில் செல்வ வளம் பெருக அனுமனை வழிபடலாம். அரசமர இலையில் "ஸ்ரீ ராம ஜெயம்" என்று எழுதி, இனிப்புகளை வைத்து வழிபடுவது நல்ல பலன் தரும் என நம்பப்படுகிறது. அனுமனை வழிபட்டு "ஸ்ரீ ராம ஜெயம்" என பக்தியுடன் உச்சரிப்பதும் மனநிம்மதியையும் முன்னேற்றத்தையும் தரும் என்று கூறப்படுகிறது.

**5 மிளகு பரிகாரம்:**

பணப் பிரச்சினைகள் தொடர்ந்து இருந்தால், 5 கருமிளகுகளை தூய்மையான துணியில் வைத்து உறங்கும்போது தலைக்கு அருகில் வைக்கலாம். மறுநாள் காலையில் குளித்து, இறைவனை வழிபட்ட பின், 4 மிளகுகளை நான்கு திசைகளிலும், 5–வது மிளகை வானத்தை நோக்கியும் வீசுவது ஒரு எளிய பரிகாரம் என ஜோதிட நம்பிக்கையில் கூறப்படுகிறது.

**கனகதாரா ஸ்தோத்திரம்:**

செல்வ வளம் பெருகவும், பொருளாதாரத் தடைகள் விலகவும் கனகதாரா ஸ்தோத்திரத்தை தினமும் பக்தியுடன் பாராயணம் செய்யலாம். இதனால் மனநம்பிக்கை, ஆன்மிக ஈடுபாடு மற்றும் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும் என்பது நம்பிக்கை.

**குறிப்பு:** இவை ஜோதிட மற்றும் ஆன்மிக நம்பிக்கைகளின் அடிப்படையிலான பரிகாரங்கள்; அறிவியல் ரீதியாக பணவரவை உறுதி செய்யும் முறைகள் அல்ல.

# 13 வயதுக்குட்பட்டோருக்கு சமூக வலைதள தடை?




புதுடெல்லி, ஆக. 10–

13 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பெற்றோர் அனுமதியின்றி சமூக வலைதளங்கள் மற்றும் ஆன்லைன் கேமிங் தளங்களில் கணக்கு தொடங்குவதைத் தடுக்க நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதா முன்மொழியப்பட்டுள்ளது.

SHIELD Bill எனப்படும் இந்த மசோதாவை மத்திய அரசு கொண்டு வரவில்லை. பாஜக எம்.பி. வைஜயந்த் பாண்டாமுன்மொழிந்துள்ளார். 18 வயதுக்குட்பட்டோருக்கான தளங்களில் பெற்றோர் கண்காணிப்பு, தனியுரிமை கட்டுப்பாடு மற்றும் பயன்பாட்டு நேரக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தவும் மசோதா வலியுறுத்துகிறது. குழந்தைகள் பயன்படுத்தும் தளங்களில் ஆன்லைன் சூதாட்டம், போதைப்பொருள் விளம்பரங்கள், ஆபாச பதிவுகளுக்கு தடை விதிக்கவும், விதிமீறும் நிறுவனங்களுக்கு ரூ.10 கோடி வரை அபராதம் விதிக்கவும் கோரப்பட்டுள்ளது. தொடர்ச்சியான விதிமீறல்களுக்கு இணைய சேவையை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக முடக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மசோதா வெள்ளிக்கிழமை அறிமுகமாக இருந்த நிலையில், அவைகள் முன்கூட்டியே ஒத்திவைக்கப்பட்டதால் அறிமுகமாகவில்லை. இன்று அறிமுகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பழனியில் முன்னாள் மாணவ-மாணவியர் சந்திப்பு!




பழனி, ஆக. 10–

பழனியில் முன்னாள் மாணவ மாணவியர் 50 ஆண்டுகளுக்கு பின்பு சந்திப்பு நிகழ்ச்சி நடை பெற்றது. பழனி அருகே உள்ளது ஆயக்குடி ஒபுளா புரம் இங்கு ஐடிஓ மேல்நி லைப்பள்ளி உள்ளது. இங்கு 1977 ஆம் ஆண்டு எஸ்எஸ்எல்சி படித்த முன்னாள் மாணவ மாணவி யர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 50ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியாக கொண்டாடப்பட்டது. பழனி அடிவாரம் தனியார் மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

பொள்ளாச்சி தொகுதி ராஜா ரவிவர்மா எம் பி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். முஹம்மது உசேன், யூகோ வங்கி முன்னாள் பொது மேலாளர் குழந்தை வேல், கல்யாணசுந்தரம், பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் முன்னாள் பேராசிரியர் ராஜா சின்னக்கருப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் 1977 ஆம் ஆண்டு எஸ்எஸ்எல்சி படித்த பசுமை நிறைந்த நினைவுகளை ஒவ்வொரு மாணவரும், நினைவு கூர்ந்து பேசினர். அது உள்ளத்தை உருக்குவதாக இருந்தது. இதில் பெண்களும் முன்னாள் ஆசிரியர்களும் பங்கேற்றனர். இந்நி கழ்ச்சியில் அனைவருக்கும் பரிசுகளும் மதிய விருந்தும் வழங்கபட்டது.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் சுதாகர், முன்னாள் ஆர்டிஓ அசோகன், முன்னாள் தாசில்தார் ராஜேந்திரன், அக்ரி சையது இப்ராகிம், ஜானகிராமன், திவாகரன், ஆயக்குடி ராதாகிருஷ்ணன், ராஜ பிரபாகரன், உடுமலை நாகராஜன், பிரகதீஸ்வரன், முருகசாமி, எல்ஜசி ராஜசேகர், நரசிம்மன், ராஜேந்திரன், பிரபாவதி, மீனாட்சி, நந்தகுமார், ரவிச்சந்திரன், நாட்ராயன், ராஜா உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்



## சினிமா துளிகள்..!

## தமிழ் சினிமாவில் கியாரா அத்வானி!




பாலிவுட்டில் முன்னணி நடிகையாக வலம் வரும் கியாரா அத்வானி, தற்போது தமிழ் சினிமாவில் அறிமுகமாகத் தயாராகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

'எம்.எஸ். தோனி', 'கபீர் சிங்', 'ஷெர்ஷா', 'பூல் புலையா 2', 'கேம் சேஞ்சர்' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள கியாரா, தெலுங்கு படங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில், தமிழில் முன்னணி இயக்குநர்களிடம் கதைகள் கேட்டு வருவதாகவும், ஒரு கதையை அவர் தேர்வு செய்து நடிக்க சம்மதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், கியாராவின் தமிழ் சினிமா என்ட்ரி குறித்து ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# கீழக்கரையில் சிறுவர்களுக்கான கபடி போட்டி!



ராமநாதபுரம், ஆக. 10–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை புது கிழக்குத் தெரு மக்கள் மற்றும் இளைஞர்கள் பொதுநல சங்கம் சார்பில் சிறுவர்களுக்கான கபடி போட்டி நடைபெற்றது. போட்டியை சங்கத்தின் துணைத் தலைவர் அசன், செயலாளர் ஹபீப் ரஹ்மான், பொருளாளர் முகைதீன் பஃஹத், செயற்குழு உறுப்பினர் முஹம்மது பாக்கர் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தனர் இதில் பெரியகாடு கபடி குழு, ஜெட் மோர் குளம், ஏர்வாடி லவ் போர்ட்ஸ், காஞ்சிரங்குடி, டேஜர் பாய்ஸ் உள்ளிட்ட 7 அணிகள் பங்கேற்றன. சிறுவர்களின் விளை யாட்டு ஆர்வத்தை ஊக்குவித்து, அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வரும் நோக்கில் நடைபெற்ற இப்போட்டியில் வீரர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். வெற்றி பெற்ற அணிகள் மற்றும் வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான கபடியை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் இந்த முயற்சிக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.


# திமுக எம்எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் மருத்துவமனையில் அனுமதி!



சென்னை, ஆக. 10–

திருச்செந்தூர் தொகுதி திமுக எம்எல்ஏவும் முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன், திடீர் உடல்நலக் குறைவு காரணமாக திருச்செந்தூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தூத்துக்குடிக்கு விமானம் மூலம் வந்தபோது லேசான உடல்நலப் பாதிப்பு ஏற்பட்டதால், திட்டமிட்ட நிகழ்ச்சிகளை ரத்து செய்தார். மருத்துவப் பரிசோதனையில் ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாக இருப்பது தெரியவந்தது. இதையடுத்து மருத்துவர்களின் ஆலோசனையின்படி மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தொண்டர்கள்மற்றும் ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# வார தொடக்க முதல்நாளில் தங்கம் விலை சற்று குறைவு;



சென்னை, ஆக. 10–

சென்னையில் வார தொடக்க முதல் நாளான இன்று (ஆகஸ்ட் 10) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 120 ரூபாய் குறைந்து ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 600 ரூபாய்க்கும், கிராமுக்கு 15 ரூபாய் குறைந்து 13,950 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.வெள்ளி விலை எந்த மாற்றமும் இன்றி ஒரு கிராம் 250 ரூபாய்க்கும், ஒரு கிலோ 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# கிண்டி அருகே ஏ.ஆர்.ரகுமான் மகன் அமீன் கார் விபத்து!



சென்னை, ஆக. 10–

ஏ.ஆர். ரஹ்மானின் மகன் ஏ.ஆர். அமீன் பயணித்த கார், சென்னையில் கால் டாக்ஸியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், அனைவரும் லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர்.பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்கு கதீஜா ரஹ்மான், ரஹீமா ரஹ்மான் என்ற இரு மகள்களும், ஏ.ஆர். அமீன் என்ற மகனும் உள்ளனர். சிறுவயதிலேயே தந்தையின் இசையமைப்பில் பாடகராக அறிமுகமான ஏ.ஆர். அமீன், 2015–ஆம் ஆண்டு வெளியான 'ஓகே கண்மணி' திரைப்படத்தில் இடம்பெற்ற 'மௌலா யா சல்லி வசல்லிம்' பாடலின் மூலம் ரசிகர்களின் கவனத்தைப் பெற்றார்.

## இந்திய பாக்ஸ் ஆபிஸ்: ஸ்பைடர் மேன்: பிராண்ட் நியூ டே திரைப்படம் செய்துள்ள வசூல்..!




பெரும் எதிர்பார்ப்புடன் கடந்த ஜூலை 30–ஆம் தேதி வெளிவந்த திரைப்படம் ஸ்பைடர் மேன்: பிராண்ட் நியூ டே. இப்படத்தை இயக்குநர் டெஸ்டின் டேனியல் க்ரெட்டன் இயக்க, டாம் ஹோலாண்ட், ஜென்டயா, சாடி சிங்க் ஆகியோர் நடித்துள்ளனர். மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் வெளியான இப்படத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை திரையரங்குகளில் கொண்டாடி வருகிறார்கள். இதனால், 6 நாட்களிலேயே உலகளவில் $1 billion வசூலை செய்து சாதனை படைத்தது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

# தேன் பிரியர்களே... இந்த விஷயத்தில் கவனம்!



ஆயுர்வேதத்தில் தேன் மருத்துவக் குணங்கள் நிறைந்த இயற்கை உணவாகக் கருதப்படுகிறது. ஆனால் அதைத் தவறான முறையில் உட்கொள்வது உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கப்படுகிறது.

குறிப்பாக தேனை 60°C–க்கு மேல் சூடாக்குவதையோ, கொதிக்கும் நீர், சூடான தேநீர் அல்லது பாலில் கலப்பதையோ தவிர்க்க வேண்டும். அதிக வெப்பத்தில் தேனில் HMF போன்ற சேர்மங்கள் உருவாகலாம் எனக் கூறப்படுகிறது.

மேலும், தேனையும் நெய்யையும் சம அளவில் கலந்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று ஆயுர்வேதக் கருத்துகள் தெரிவிக்கின்றன. புளித்த தயிர், மதுபானம் போன்ற நொதிக்கப்பட்ட உணவுகளுடனும் தேனைச் சேர்ப்பது செரிமானப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

அதேபோல், வெள்ளைச் சர்க்கரையுடன் தேன், மீனுடன் தேன், முள்ளங்கி அல்லது வெங்காயத்துடன் தேன் சேர்த்து உட்கொள்வதையும் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது. எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற சிட்ரஸ் பழங்களுடன் சூடான தேனை கலந்து சாப்பிடுவதும் வயிற்று எரிச்சலை ஏற்படுத்தக்கூடும்.

எனவே, தூய்மையான தேனை மிதமான அளவில், அதிக வெப்பமின்றி பயன்படுத்துவதே பாதுகாப்பான முறையாகும்.

# மருத்துவ படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் வெளியீடு!

சென்னை, ஆக. 10–

மருத்துவ படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட உள்ளது. தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் 13,999 எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். இடங்கள் உள்ளன.



அந்தவகையில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள அரசு, நிர்வாக ஒதுக்கீட்டு எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். இடங்களுக்கான கலந்தாய்வை மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் நடத்துகிறது. அதன்படி, நடப்பாண்டுக்கான மருத்துவ மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கு ஆன்லைன் விண்ணப்ப பதிவு நிறைவு பெற்றது. அதில் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பித்தனர். மொத்தம் 72,627 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இருந்தன.

கலந்தாய்வு எப்போது தொடங்கும்? என மாணவ–மாணவிகள், அவர்களுடைய பெற்றோர் எதிர்பார்த்த நிலையில் விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு தரவரிசை பட்டியல் வெளியிடப்பட உள்ளது. மேலும், கலந்தாய்வு குறித்த அட்டவணையும் வெளியாக இருக்கிறது.

# வீட்டு உபயோக மானிய சிலிண்டர்: தொடர்ந்து கிடைக்க ஆக.15-க்குள் eKYC செய்வது கட்டாயம்!



டெல்லி,. ஆக. 10–

வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர் மானிய விலையில் தொடர்ந்து கிடைக்க, வரும் ஆகஸ்ட் 15–க்குள் eKYC செய்வது கட்டாயம் என எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளது. எரிவாயு இணைப்புதாரர் நேரில் சென்று நுகர்வோர் புத்தகம் மற்றும் அடையாள ஆவணங்களுடன் இதனைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில், eKYC செய்யும் வரை மானிய விலை சிலிண்டர் கிடைக்காது என்றும் எண்ணெய் நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.



ஈரோடு மாணிக்கம் பாளையம் வீட்டுவசதி வாரியத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ கருப்பண்ணசாமி, ஸ்ரீ கன்னிமார் சுவாமி, ஸ்ரீ அங்காளம்மன், ஸ்ரீ நாகம்மன் சுவாமிகள் திருக்கோயில் தீர்த்த திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.இந்த திருவிழா நிகழ்வினை ஈரோடு மாநகராட்சி 2 ஆம் மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) மு.சுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பரதநாட்டிய நடன நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு ஈரோடு நகர காவல் துணை கண்காணிப்பாளர் முத்துக்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர். விழாவில் கவிஞர் ஈரோடு ப.இளையகோபால், கோயில் நிர்வாகிகள் K.அருண்பிரசாத், அப்பாசாமி, R.கோகிலா, கிளாசிக் இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். 4 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# 'வீடுதோறும் மூவர்ணக்கொடி ஏற்றுங்கள்' பிரதமர் மோடி அழைப்பு!

புதுடெல்லி, ஆக. 10–

இந்தியாவின் 75–வது சுதந்திர ஆண்டான கடந்த 2022–ம் ஆண்டில் இருந்து 'வீடுதோறும் மூவர்ணக்கொடி' என்ற இயக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. இதன்படி, பொதுமக்கள் தங்கள் வீடுகளில் மூவர்ணக்கொடி ஏற்ற வேண்டும். நடப்பாண்டுக்கான 'வீடுதோறும் மூவர்ணக்கொடி' இயக்கம் நேற்று தொடங்கி, 17–ந் தேதி வரை நடக்கிறது. இதையொட்டி, பிரதமர் மோடி தனது 'எக்ஸ்' பக்கத்தில் கூறியிருப்பதாவது:

நமது மூவர்ணக்கொடிதான் நமது பெருமை. நாட்டுக்கு சிறப்பாக பங்காற்ற வேண்டும் என்பதற்கு தொடர்ந்து



உத்வேகம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. 'வீடுதோறும் மூவர்ணக்கொடி' இயக்கத்தில் ஆர்வமாக பங்கேற்போம். வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதற்கான பங்களிப்பை அளிக்க கூட்டாக உறுதி ஏற்போம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# FCRA திருத்த மசோதா: வெளிப்படைத்தன்மையே நோக்கம் இந்திய தூதர்

வாஷிங்டன், ஆக. 10–

வெளிநாட்டு நிதியை ஒழுங்குபடுத்தும் FCRA சட்டத்தை கடுமையாக்கும் 2026 திருத்த மசோதா, அதிக வெளிப்படைத்தன்மை, சிறந்த நிர்வாகம் மற்றும் தெளிவான விதிகளை உறுதி செய்யும் என அமெரிக்காவுக்கான இந்திய தூதர் வினய் மோகன் குவாத்ரா தெரிவித்துள்ளார்.





வெளிநாடுகளில் இருந்து இந்திய தனிநபர்கள், NGO–க்கள், அறக்கட்டளைகள் பெறும் நன்கொடைகளை FCRA சட்டம் நிர்வகிக்கிறது. 1976–ல் அறிமுகமான இச்சட்டம் 2010–ல் நவீனப்படுத்தப்பட்டு, 2016, 2018, 2020–ல் திருத்தப்பட்டது.

2026 மசோதா வெளிநாட்டு நிதியைத் தடுக்காது. சுகாதாரம், கல்வி, பேரிடர் நிவாரணம், ஆராய்ச்சி, மனிதாபிமானப் பணிகளுக்காக சட்டப்படி செயல்படும் அமைப்புகள் தொடர்ந்து நிதி பெறலாம். 2010–11ல் 1.2 பில்லியன் டாலராக இருந்த வெளிநாட்டு நிதி, 2024–25ல் 2.67 பில்லியன் டாலராக அதிகரி த்துள்ளது. இந்தியாவில் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட NGO–க்கள் உள்ள நிலையில், 14,450 அமைப்புகள் மட்டுமே FCRA பதிவுபெற்றுள்ளன.

பதிவு ரத்து செய்யப்பட்டால் அதன் நிதி மற்றும் சொத்துகள் ஏற்கனவே அரசு கட்டுப்பாட்டுக்கு வரும் நடைமுறை தொடரும். புதிய மசோதா, சொத்துகளைப் பாதுகாக்க தனி அதிகார அமைப்பையும், பதிவு மீண்டும் கிடைத்தால் சொத்துகள் மற்றும் பயன்படுத்தப்படாத நிதியைத் திரும்பப் பெறும் வாய்ப்பையும் வழங்குகிறது.

வழிபாட்டுத் தல சொத்துகள் தொடர்புடைய அமைப்பின் பதிவு ரத்து செய்யப்பட்டால், அதே மதத்தைச் சேர்ந்த FCRA பதிவு பெற்ற மற்றொரு அமைப்பிடம் ஒப்படைக்கப்படும். மதம், சமூகம், சித்தாந்தம் பாராமல் அனைத்து அமைப்புகளுக்கும் சட்டம் சமமானது என்றும், மதக் கல்வி, வழிபாட்டுத் தல பராமரிப்பு உள்ளிட்ட அறப்பணிகளுக்கும் வெளிநாட்டு நிதி பெறத் தகுதி தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம்: தீர்மானத்திற்கு திமுக, அதிமுக ஆதரவு!

சென்னை, ஆக. 10–

"தமிழ்த்தாய் வாழ்த்தின் மரியாதையை பாதுகாப்பதில் தவெக அரசு சமரசம் செய்யாது. தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட வேண்டும் என்று கூறுவது அரசியல் சார்ந்த விவாதமாக மாற வேண்டிய அவசியம் இல்லை. கட்சி வேறுபாடுகளை கடந்து ஒன்றிணைந்து அனைத்து உறுப்பினர்களும் இந்த தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும்" என்று தெரிவித்தார். இந்த தீர்மானத்திற்கு திமுக மற்றும் அதிமுக ஆதரவு தெரிவித்துள்ளது. திமுக



தரப்பில் பேசிய கோவி. செழியன், "தமி ழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என்று பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தது திமுக அரசுதான். 2021 டிச. 12ல் முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அந்த தீர்மானத்தை கொண்டு வந்தார்.

அதேபோல தமிழ்நாடு என பெயர் சூட்டியது அண்ணா, தமிழ்த்தாய் வாழ்த்தைக் கொண்டுவந்தது கருணாநிதி. தமிழ் மொழியை செம்மொழி ஆக்கியது, செம்மொழி தமிழாய்வு நிறுவனம் கொண்டு வந்தது உள்ளிட்ட தமிழ் வளர்ச்சிக்கான பல செயல்களை திமுக செய்து ள்ளது" என்று கூறி தீர்மான த்திற்கு ஆதரவு தெரிவித்தார்.

அதேபோல அதிமுக சார்பில் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், "தமிழ் என்று வரும் நேரத்தில் நாம் அனைவரும் ஒரே குரலில் ஒலிக்க வேண்டும். தமி ழ்த்தாய் வாழ்த்து பாடப்படு வது யாருக்கும் எதிரானது அல்ல. தேசப்பற்றும் மொழிப்பற்றும் வேறு வேறானது அல்ல" என்று கூறி தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தார்.

# விஜய் VS தனுஷ்: தமிழக அரசியலின் புதிய களம்..!

சென்னை, ஆக. 10–

எதிர்காலத்தில் நடிகர் தனுஷ் அரசியலுக்கு வருவதற்கான யோகம் இருக்கிறது. அவர் அரசியல் களத்தில் அடியெடுத்து வைக்கும் காலம் வந்தால் தமிழக அரசியலில் புதிய போட்டி உருவாகும். பிரபல ஜோதிடர் ரத்தன் பண்டிட், அரசியல் கட்சி தலைவர்கள், திரையுலக நட்சத்திரங்கள் மற்றும் தொழில்துறை பிரபலங்களுக்கு பல ஆண்டுகளாக ஜோதிட ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இவர் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆஸ்தான ஜோதிடராக இருந்து முக்கிய ஆலோசனைகளை வழங்கியவர் என்ற பெருமையையும் பெற்றவர். அதேபோல் முதலமைச்சர் விஜய்யுடனும் நீண்டகாலமாக நெருக்கமாக இருந்து வருகிறார்.

சமீபத்திய தமிழக சட்டசபை தேர்தலின் போது அவரது ஜோதிட கணிப்பு உலகம் முழுவதும் பேசுபொருளானது. தேர்தல் ஆணையம் காலை 10 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்று அறிவித்து இருந்த நிலை யில், அதற்கு முன்பாகவே காலை 9 மணியளவில் பூங்கொத்துடன் விஜய்யை நேரில் சந்தித்து, "வெற்றி க்கு வாழ்த்துகள்" என்று கூறி வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர் தேர்தல் முடிவுகள் வெளியானதில் விஜய் வெற்றி பெற்று தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றதை தொடர்ந்து, ரத்தன் பண்டிட்டின் ஜோதிடத் திறன் உலகளவில் கவனம் பெற்றதுடன், அவரது கணிப்பு பரவலாக பேசப்பட்டது. இந்தநிலையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், ஜோதிடர் ரத்தன் பண்டிட்டுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. விருது பெற்ற அவர் பேசும்போது, தமிழக முதலமைச்சர் விஜய் குறித்து மீண்டும் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். மேலும் அரசியலில் யார் யாரெல்லாம் சாதிப்பார்கள். யாரெல்லாம் ஜொலிக்க மாட்டார்கள் என்றும் அவர் தனது கணிப்பை தெரிவித்தார். விழாவில் ஜோதிடர் ரத்தன் பண்டிட் பேசியதாவது:–



முதலமைச்சர் விஜய் கையில் கட்டி இருக்கும் சிகப்பு கயிறு முருகப்பெருமானின் அருளின் அடையாளம். அந்த சிகப்பு கயிறு வெற்றியையும் உயர்வையும் குறிக்கிறது. முருகனின் அருளால் அவருக்கு மிகப்பெரிய வெற்றி கிடைக்கும். அவர் எடுத்துள்ள பாதை வெற்றிப் பாதையாக அமையும். முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இனி வெற்றி யோகம் இல்லை. அவருடைய அரசியல் பயணம் ஓய்வை நோக்கி செல்லும்.

விஜய் அரசியலுக்கு வரவில்லை என்றால் உதயநிதி ஸ்டாலினுக்கு முதலமைச்சராகும் வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் தற்போதைய சூழலில் அவருக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியே அமையும். அண்ணாமலைக்கு தமிழக அரசியலில் முதலமைச்சர் யோகம் இல்லை. இனி தமிழக அரசியலில் முக்கிய சக்தியாக இருப்பவர் முதலமைச்சர் விஜய் தான்.

எதிர்காலத்தில் நடிகர் தனுஷ் அரசியலுக்கு வருவதற்கான யோகம் இருக்கிறது. அவர் அரசியல் களத்தில் அடியெடுத்து வைக்கும் காலம் வந்தால் தமிழக அரசியலில் புதிய போட்டி உருவாகும். அதுவரை தமிழக முதலமைச்சர் விஜய்க்கு குறிப்பிடத்தக்க அரசியல் போட்டி இருக்காது.

தனுசின் அரசியல் வருகைக்கு பிறகே தமிழக அரசியல் புதிய கட்டத்தை நோக்கி செல்லும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஜோதிடர் ரத்தன் பண்டிட் பகிர்ந்த இந்த கணிப்புகள் விழாவில் பங்கேற்றவர்களின் கவனத்தை ஈர்த்ததோடு, நிகழ்ச்சி முடிந்த பிறகும் சமூக வலைதளங்களில் பரபரப்பான விவாதங்களை ஏற்படுத்தி வருகிறது.

# ஜோ பைடனுக்கு புற்றுநோய் பாதிப்பு தீவிரம்!

வாஷிங்டன், ஆக. 10–

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுக்கு தீவிரமான புற்றுநோய் பாதிப்பு இருப்பதாக மகன் ஹன்டர் பைடன் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுக்கு விதைப்பையில் புற்றுநோய்ப் பாதிப்பு ஏற்பட்டது. அவர் பதவியில் இருந்தபோதே இதற்காக சிகிச்சை எடுத்து வந்தார். அப்போது துணை ஜனாதிபதி கமலா ஹாரீஸ் அவருடைய பணிகளைக் கவனித்து வந்ததை தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலில் டிரம்பிடம் தோல்வியை தழுவினார்.

ஜோ பைடன் தனது பதவிக்காலம் முடிந்த பிறகு, கடந்த மே மாதத்தில் தனக்கு தீவிரமான புற்றுநோய்ப் பாதிப்பு இருப்பதை பகிரங்கமாக அறிவித்தார்.

இந்த நிலையில் அவருக்கு நோய்ப் பாதிப்பு தீவிரம் அடைந்துள்ளதை அவருடைய மகன் ஹன் டர் பைடன் உறுதிப்படுத்தினார். இதுகுறித்து ஹன்டர் பைடன் அளித்த பேட்டியில் தந்தையின் இந்த நிலையை காண்பது தங்களுக்கு மிகுந்த மனவருத்தத்தை அளிப்பதாகக் தெரிவித்தார்.

# வேலை வாய்ப்பு

## சென்னை ICF–ல் 1,010 பணியிடங்கள்!





இன்டிக்ரல் கோச் பேக்டரி (ICF), சென்னை 2026–ம் ஆண்டுக்கான 1,010 Act Apprentice பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிறுவனம்: Integral Coach Factory (ICF), Chennai
அறிவிப்பு எண்: PB/RR/39/App/2026
பணியிடங்கள்: 1,010
பணி: Act Apprentice
பயிற்சி காலம்: 1 ஆண்டு
பணியிடம்: சென்னை
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்ப தொடக்கம்: 08.08.2026 காலை 9.30 மணி
கடைசி நாள்: 07.09.2026 மாலை 5.30 மணி

**முக்கிய அறிவிப்பு**

தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் கடைசி தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் முன் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதி, வயது வரம்பு மற்றும் பிற தகுதி நிபந்தனைகளைசரிபார்க்க வேண்டும்.

அதிகாரப்பூர்வ விண்ணப்ப இணையதளம்:
https://pb.icf.gov.in/act2026/

# மம்தா பானர்ஜியின் கார் மீது கற்கள், சேறு வீசி தாக்குதல்!



பர்கானாஸ், ஆக. 10–

பிர்ஜுவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள அவரது வீட்டிற்கு மம்தா பானர்ஜி சென்றார். அப்போது அவரது காரை மறித்து சிலர் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், காரின் மீது கற்களையும் சேற்றையும் வீசி தாக்குதல் நடத்தினர். தாக்குதல் சம்பவம் குறித்து பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி, "இதுபோன்ற ஒரு சம்பவத்தை நான் இதுவரை சந்தித்ததில்லை. காரின் ஜன்னல் திறந்திருந்தால் எனது மண்டை உடைந்திருக்கும்" என்று தெரிவித்தார். போலீசாரின் கண் முன்னிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

காரை நோக்கி வீசப்பட்ட கற்கள் தனது தலையில் பட்டிருந்தால் நிச்சயம் உயிரிழந்திருப்பேன் என்றும் மம்தா கூறினார். போலீசாருக்கு பாஜகவை காப்பாற்றுவது மட்டுமே கடமையாக இருப்பதாக அவர் விமர்சித்தார். சுவேந்து அதிகாரியின் ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்து ள்ளதாகவும் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார்.

தாக்குதல் நடைபெற்ற போது மம்தாவுடன் இருந்த திரிணாமூல் காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் கல்யாண் பானர்ஜி மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் தோலன் சென் ஆகியோரும், பாஜக ஆட்சியில் வன்முறை கலாச்சாரம் தலைவிரித்தா டுவதாக விமர்சித்தனர். இதனிடையே, மம்தா பானர்ஜி மீதான தாக்குதலு க்கு பாஜகவும் கண்டனம் தெரிவித்துள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## ரேஷன் கடையில் திடீர் ஆய்வு செய்த எம்ஜிஆர்? பேரவைத் தலைவர் ருசிகர தகவல்...!

பேரவைத் தலைவா ஜேசிடி பிரபாகர், எம்ஜிஆருடனான ஒரு நிகழ்வைப் பேரவையில் பகிர்ந்துகொண்டார்.

"ஒரு சுவையான, மனதில் என்றும் நினைத்துக்கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு. இங்கு இப்போது சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். 1984 பிப். 12ம் நாள் எம்ஜிஆருடன் காரில் பயணித்துக் கொண்டிருக்கிறேன். மேற்கு கேகே நகர் பக்கம் கார் செல்லும்போது ஓரிடத்தில் கூட்டம் அதிகம் இருந்தது. 'இது ரேஷன் கடை, வில்லிவாக்கம் தொகுதியின்கீழ் வருகிறது' என்று சொன்னேன். அவர் உடனே காரை நிறுத்தச் சொல்லி ரேஷன் கடைக்குச் செல்கிறார். அங்கு ஒரு சாதாரண ஸ்டூல் இருந்தது. அதில் அவரே உட்கார்ந்து கொண்டார்.



அரிசியை காண்பிக்கச் சொன்னார். அரிசியை ஆய்வு செய்து எடையையும் சரிபார்த்தார். கடைக்குள் சென்று பார்த்தார். 'கடையை ஒழுங்காக திறக்கிறார்களா?' என்று மக்களிடம் கேட்டார். ஒழுங்காகத் திறக்கிறார்கள் என்று மக்கள் சொன்னார்கள்.

பின்னர் காரின் அருகில் வரும்போது என்னிடம் சொன்னார். 'இது ஒழுங்காக இருக்கும் வரைக்கும் நாம் திரும்ப திரும்ப ஆட்சிக்கு வருவோம்' என்று சொன்னார்.

நீங்கள் எல்லாம் இதுபற்றி பேசும்போது எனக்கு இந்த நினைவு வந்தது" என்று கூறினார்.

## டெல்லியில் ஆக. 11-ல் கூடுகிறது காவிரி நீர் ஒழுங்காற்று குழு!

புதுடெல்லி, ஆக. 10– சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்பேரில் அமைக்கப்பட்டுள்ள காவிரி மேலாண்மை ஆணையம் மாதம் ஒருமுறை கூடி வருகிறது. அதன் துணை அமைப்பான காவிரி ஒழுங்காற்றுக்குழுவுக்கு மாதம் இத்தனை முறை கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற விதி இல்லை. எப்போது வேண்டுமானாலும் அது கூடும். அந்த வகையில் காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் 139ஆவது கூட்டம் டெல்லியில் நடைபெறுகிறது.

காவிரியில் இருந்து ஆகஸ்ட் மாதத்தில் திறந்துவிடப்படும் தண்ணீர் குறித்து விவாதிப்பதற்காக கூடுகிறது. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மாநில அதிகாரிகள் ஒழுங்காற்று குழு கூட்டத்தில் பங்கேற்கின்றனர். கர்நாடக அரசு ஆகஸ்ட் மாதம் 45.5 டிஎம்சி நீர் திறந்துவிட வேண்டிய நிலையில் ஒழுங்காற்று குழு கூட்டம் நடக்கிறது. ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 88 டிஎம்சி திறக்க வேண்டிய நிலையில் 10 டிஎம்சி மட்டுமே திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



## தமிழக பஸ்கள் கர்நாடகத்துக்கு செல்லுமா?

சென்னை, ஆக. 10– கர்நாடகத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் காவிரியில் தமிழகத்துக்கு கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மைசூரு மாவட்டத்தில் உள்ள கபினி அணை நிரம்பி விட்டதால் உபரிநீர் திறக்கப்பட்டு வருகிறது.



இதற்கிடையே காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க கர்நாடக விவசாயிகளும், கன்னட அமைப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னட கூட்டமைப்பு சார்பில் வருகிற 13–ந்தேதி கர்நாடகத்தில் முழுஅடைப்பு போராட்டம் அறிவிக்கப்பட்டு உள்ளது. அந்த போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் திட்டமிட்டபடி முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படும் என்று கன்னட கூட்டமைப்பு தலைவர் வாட்டாள் நாகராஜ் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் நேற்று அவர் பெங்களூருவில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது:– காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டப்பட வேண்டும். அதுபோல் கர்நாடக விவசாயிகளுக்கே தண்ணீர் இல்லாதபோது காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடக்கூடாது. இதை கர்நாடக அரசு கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை (அதாவது இன்று) அத்திப் பள்ளியில் உள்ள கர்நாடகா–தமிழ்நாடு எல்லையில் கன்னட கூட்டமைப்பு சார்பில் போராட்டம் நடத்தப்படும். காலை 11 மணிக்கு போராட்டத்தை நடத்த திட்டமிட்டு இருக்கிறோம்.

அப்போது நாங்கள் தமிழ்நாட்டில் இருந்து வரும் தமிழக அரசு பஸ்கள் உள்பட அனைத்து வாகனங்களையும் தடுத்து நிறுத்த உள்ளோம். தமிழகத்தில் இருந்து வரும் வாகனங்களை கர்நாடகத்துக்குள் அனுமதிக்க மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார். கன்னட கூட்டமைப்பினரின் இந்த போராட்ட அறிவிப்பால் எல்லையில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் இருமாநில எல்லையிலும் போலீசாரும் குவிக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதனால் தமிழக அரசு பஸ்கள் உள் பட தமிழ்நாட்டில் இருந்து அத்திப்பள்ளி வழியாக அனைத்து வாகனங்களும் கர்நாடகத்துக்குள் அனுமதிக்கப்படுமா? இல்லை எல்லையிலேயே நிறுத்தி வைக்கப்படுமா? என்ற பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## வென்றால் எடப்பாடி பழனிசாமி காரணம்; தோற்றால் மாவட்டச் செயலர்கள் காரணமா? சி.வி. சண்முகம்!

சென்னை, ஆக. 10– தேர்தலில் வென்றால் எடப்பாடி பழனிசாமி காரணம்; தோற்றால் மாவட்டச் செயலர்கள் காரணமா? என எம்எல்ஏ சி.வி. சண்முகம் தெரிவித்துள்ளார்.



சட்டப்பேரவை வளாகத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளர் பொறுப்பேற்றபின் ஒரு தேர்தலில்கூட அதிமுக வெற்றிபெறவில்லை. சட்டப்பேரவை, நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல் எதிலும் பொதுச்செயலரால் வெல்ல முடியவில்லை. எடப்பாடி பழனிசாமியின் சொந்த செல்வாக்கில்தான் 47 தொகுதிகளில் வென்றதாக அக்ரி கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார்.

47 தொகுதிகளில் மட்டுமே அவருக்கு செல்வாக்கு என்றால், மற்ற தொகுதியில் அவருக்கு செல்வாக்கில்லை என்கிறாரா? சொந்த மாவட்டமான சேலத்தில் 7 தொகுதியில் ஏன் பழனிசாமிக்கு செல்வாக்கு இல்லை? வென்றால் எடப்பாடி பழனிசாமி காரணம், தோற்றால் மாவட்டச் செயலர்கள் காரணமா? சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் 3 தொகுதிகளில் மட்டுமே அதிமுக வெற்றி பெற்றிருக்கிறது.


தமிழ்நாட்டில் தென் மாவட்டம் பூஜ்ஜியம், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் அதிமுக முழுமையாக தோல்வியடைந்துள்ளது. கூட்டணியில் பாமக இருந்ததால் வட மாவட்டங்களில் 34 தொகுதிகளில் அதிமுக வென்றது. தோல்விக்குப் பொறுப்பேற்று பல தலைவர்கள் தங்களது பொறுப்புகளை ராஜிநாமா செய்துள்ளார்கள். காங்கிரஸ் தோல்விக்கு பொறுப்பேற்று ராகுல் காந்தி ராஜிநாமா செய்தார்.

அதிமுக தோல்விக்குப் பொறுப்பேற்று எடப்பாடி பழனிசாமியை ராஜிநாமா செய்யச் சொன்னோமா? அதிமுக பொதுச்செயலராக அவரே இருக்கட்டும், தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும் என்று கோருகிறோம் என்று தெரிவித்தார்.

## நாடாளுமன்றம் 4-வது வாரமாக முடங்கியது!

புதுடெல்லி, ஆக10– நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பிக்களின் அமளியால் தொடர்ந்து நான்காவது வாரமாக இரு அவைகளும் முடங்கியுள்ளன.

நீட் வினாத்தாள் கசிவுக்கு எதிராக போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது காவல்துறை தாக்குதல் நடத்தியது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விளக்கம் அளிக்க வேண்டும் எனத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் நான்காவது வாரத்தின் முதல் நாளான இன்று காலை வளாகத்துக்கு வந்த பிரியங்கா காந்தி செய்தியாளர்களுடன் பேசுகையில், உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் விளக்கம் கிடைக்கும் வரை நாடாளுமன்றத்தை முடக்குவோம் என்றார். இந்த நிலையில், மக்களவை கூட்டத்தொடர் இன்று காலை கூடியவுடன் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், பகல் 12 மணிவரை அவை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதேபோல், மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டு முழக்கமிட்டதால் சிறிது நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

வருகின்ற ஆகஸ்ட் 13 ஆம் தேதியுடன் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நிறைவடையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தினவிழா ஏற்பாடுகள் தீவிரம் - முதல் முறையாக தேசியக்கொடி ஏற்றுகிறார் முதலமைச்சர் விஜய்!

சென்னை, ஆக. 10– சுதந்திர தினத்தையொட்டி வருகிற 15–ந் தேதி முதலமைச்சர் விஜய் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடி ஏற்றஇருப்பதையொட்டி விழா ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

நாட்டின் 80–வது சுதந்திர தின விழா வருகிற 15–ந்தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் விஜய் முதல் முறையாக தேசியக் கொடியை ஏற்றுகி றார். முன்னதாக போலீசாரின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக் கொள்கிறார். இந்த விழாவில் முதலமைச்சர் விஜய், தமிழ்நாட்டுக்கும், தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்த தகைசால் தமிழர் விருது ரூ.10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழை வழங்க இருக்கிறார்.

அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு டாக்டர் அப்துல்கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல்ஆளுமை விருது, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணிகளுக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்ட விருதுகளையும் முதலமைச்சர் விஜய் வழங்கி கவுரவிக்க உள்ளார்.

இந்நிலையில், கோட்டை கொத்தளத்தில் சுதந்திரத் தின விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. சென்னை தலைமைச் செயலகம் எதிரில் மேடை அமைப்பது உள்ளிட்ட பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. வர்ணம் பூசும் பணிகளும் மும்முரமாக நடந்து வருகின்றன.



சுதந்திரதின விழாவுக்கான அணிவகுப்பு ஒத்திகை மெரினா கடற்கரையில் கடந்த 7–ந்தேதி நடந்தது. தொடர்ந்து, அணிவகுப்பு ஒத்திகை மற்றும் 13–ந் தேதிகளிலும் நடக்கிறது. அணிவகுப்பு ஒத்திகை நடக்கும் நாட்களில் தலைமைச் செயலகம் மற்றும் மெரினா சுற்றுவட்டார பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. அணிவகுப்பு ஒத்திகை மற்றும் சுதந்திர தின விழாவை முன்னிட்டு காமராஜர் சாலை, ராஜாஜி சாலை மற்றும் கொடி மர சாலை ஆகியவற்றில் வாகனங்கள் செல்வதற்கு உரிய அனுமதி அட்டை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. அனுமதி அட்டை இல்லாத வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த சாலை பகுதிகளை பயன்படுத்த அனுமதி இல்லை. மேலும் பாதுகாப்பு கருதி விமான நிலையம், ரெயில் நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் முக்கிய பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பெற்றுக் கொண்டார்.

## சென்னை காசிமேட்டில் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்!

சென்னை, ஆக. 10– சென்னை காசிமேடு பகுதியை சேர்ந்த விசைபடகு உரிமையாளர்கள் கணேசன் மற்றும் கர்ணன் என்பவருக்கு சொந்தமான 2 விசைபடகுகளில், மீன்பிடி தடை காலம் நிறைவு பெற்ற கடந்த 15–ம் தேதி 19 மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றனர்.

காசிமேட்டில் இருந்து மீன் பிடிக்க சென்ற இவர்களை, ஆந்திர கடலசார் சிறைபிடித்துள்ளனர். மேலும் அவர்கள் 2 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர்.



மேலும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்டுத் தரக்கோரி மீனவர்கள் காசிமேட்டிலும், சென்னை மீன்வளத்துறை அலுவலகத்திலும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். மேலும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால், ஆந்திர அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள விசைப்படகுகளை மீட்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், ஆந்திராவில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், படகுகளையும் மீட்கக் கோரி சென்னை காசிமேட்டில் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுதால் ரூ.10 கோடி வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020